RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s22213

# சங்ககாலம் முதல் தமிழர் விழாக்கள்

க. சுரேஷ் [அ, *]

[அ] தமிழாய்வுத் துறை, அரசு கலைக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி-620022, தமிழ்நாடு, இந்தியா

# Tamil Festivals from Sangam Age

K. Suresh [a, *]

[a] Research Department of Tamil, Government Arts College, Tiruchirappalli-620022, Tamil Nadu, India

* Corresponding Author: Sureshrk82@gmail.com

Received: 26.09.2022
Revised: 21-10-2022
Accepted: 30-10-2022
Published: 01-12-2022

Check for updates

## ABSTRACT

From birth to death, every important event is celebrated as a token of gratitude to God. It can be seen from the Sangam literature that not only the house festivals but also the land system in which the people live, the festivals were celebrated in the respective localities. Festivals contain the cultural elements, traditions, and human values of the race. The landscape occupies a prominent place in shaping the history and lives of mankind. More than 2000 years ago, the Tamils divided their lives into four on the basis of the landscape, defined the merits of each, and lived accordingly. It is from this kind of landscape that festivals also take shape as per the need. The people of the four lands have celebrated different festivals according to their settings and needs. The lives of the ancient Tamils were full of celebrations. Our forefathers were sages who knew astrology, mathematics, and astronomy. The star that falls on the full moon day, where the moon appears as the full moon, was the name of the month and the temple festival. Most of the festivals take place around the full moon. Looking at the manner in which various festivals were celebrated from ancient times to the present day, one can see that he was blessed to live a life of excellence in knowledge and civilization. It is astonishing to see the antiquity of the period during which there is no evidence of how the Tamils began to celebrate such festivals. About 2500 years ago, when the whole world was living as barbarians, the Tamil people were the only ones who excelled in culture and civilization, making us Tamils proud. It would not be an exaggeration to say that while festivals are a way of thanking God, there will be economic progress in the lives of a wide range of people.

**Keywords:** Tamil People, Sangam Literature, Tamil Festivals, Celebrations

## முன்னுரை

ஓரினத்தின் பண்பாட்டுக் கூறுகளையும் மரபுகளையும் மானுட விழுமியங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது விழாக்கள். மானுடத்தின் வரலாற்றையும் வாழ்வையும் வடிவமைப்பதில் நிலவமைவு முதன்மை இடம் பெறுகின்றது. 2000 ஆண்டுகளுக்கு முன்பே நிலவமைப்பின் அடிப்படையில் தமது வாழ்வை நான்காக வகுத்து, ஒவ்வொன்றுக்குமான சிறப்புகளை வரையறுத்து அதற்கமைய வாழ்ந்தோர் தமிழர். இவ்வாறான நில வகைப்பட்ட வாழ்விலிருந்து தேவைக்கேற்ப விழாக்களும் தோற்றம் கொள்கின்றன. நான்கு நிலத்து மக்களும் தமது அமைவுகளுக்கும் தேவைகளுக்கும் ஏற்ப வேறுபட்ட விழாக்களை கொண்டாடி வந்திருக்கின்றனர். பழந்தமிழர் வாழ்வு கொண்டாட்டங்களால் நிறைந்தது. ஆடுவோரும் பாடுவோரும் வாழ்வை அழகு மிக்கதாக்கினர். கூத்தர், பாணர், விறலியர் போன்ற

இலக்கிய மாந்தரே இந்த கொண்டாட்டங்களுக்குச் சான்றாவர். ஒவ்வொரு நிலத்தவரும் பல்வகைப்பட்ட கூத்துக்களை ஆடியுள்ளனர்.

## விழாக் கொண்டாடும் மரபுகள்

தொல்தமிழர் நற்காரியங்களான விழாக்களைக் குறிப்பிட்ட நல்ல நாளில் திட்டமிட்டுக் கொண்டாடினர். இதற்குச் சான்றாக நக்கீரரின்,

“மழைக்கால் நீங்கிய மாக விசும்பில்

குறுமுயல் மறுநிறம் கிளர,மதிநிறைந்து,

அறுமீன் சேறும் அகலிருள் நடுநாள்;

மறுகுவிளக்கு உறுத்து மாலை தூக்கி,

பாலியல் மூதூர்ப் பலருடன் துவன்றிய

விழவுஉடன் அயர, வருகையில் அம்ம”

என வரும் பாடலில் வளர்பிறை மற்றும் முழுமதி நாட்களில் தொடங்கியமையைக் கூறலாம்.

## மாதந்தோறும் விழாக்கள்

### சித்திரை திருவிழா

தமிழ் வருடப்பிறப்பான சித்திரை மாதத்தில், பௌர்ணமிக்கு முன்னதாக 10 நாட்கள் கொண்டாடப்படும் விழாவாகும். மதுரையில் சித்திரை திருவிழா சைவமும் வைணவமும் இணைந்த திருவிழா ஆகும். இரு சமயங்கள் தொடர்புடைய மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணமும், அழகர் ஆற்றில் இறங்கும் திருவிழாவும் விளங்குகின்றன.

### துணை சித்திரை திருவிழா

மதுரையில் சித்திரை திருவிழாவில் அழகர் ஆற்றில் இறங்கும் திருவிழா போன்றே, மதுரை மாவட்டம் சோழவந்தானிலும், மானாமதுரையிலும், பரமக்குடியிலும், அழகன் குளத்திலும் அழகர் ஆற்றில் இறங்கும் திருவிழா நடைபெறுகின்றது.

### வீரபாண்டி சித்திரை திருவிழா

தேனி அருகில் வீரபாண்டியில் உள்ள வீரபாண்டி கௌமாரியம்மன் கோவிலிலும் சித்திரை திருவிழா கொண்டாடப்படுகின்றது.

### வைகாசி விசாகப் பெருவிழா

வைகாசி விசாகம் என்பதே முருகக்கடவுள் அவதாரம் செய்த நாளாகும். வைகாசி மாதத்தில் உள்ள விசாக நட்சத்திரத்தில் வரும் சிறப்பு நாள் இதுவாகும்.

### ஆனி திருமஞ்சனம்

ஆனித் திருமஞ்சனம் என்பது சிவாலயங்களில் நடராசருக்கு ஆனி மாதத்தில் அபிஷேகம் செய்யப்படும் நாளாகும். சிதம்பரம் நடராசர் கோவிலில் ஆனி உத்திர திருவிழா கொண்டாடப்படுகின்றது.

### மாங்கனி திருவிழா

ஒப்பற்ற சிவன் அடியாராக வாழ்ந்த காரைக்கால் அம்மையாரின் வாழ்க்கையையும் தொண்டுகளையும் மக்களுக்கு தெரிவிக்கும் வகையில் ஆண்டுதோறும் ஆனி மாத பௌர்ணமி தினத்தை ஒட்டி மாங்கனி திருவிழா நடைபெறுகின்றது.

### ஆடிப்பெருக்கு

பொதுவாக ஆடி, மழைக்கால விழா என்று அழைக்கப்படுகிறது. இது ஆடியின் 18 ஆவது நாளில் கொண்டாடப்படும் தென்னிந்திய கலாச்சார விழா ஆகும். இந்த விழா நீரின் உயிர்களை நிலை நிறுத்தும் பண்புகளுக்கு அஞ்சலி செலுத்துகிறது. மனித குலம் அமைதி, செழிப்பு மற்றும் மகிழ்ச்சியுடன் ஆசீர்வதிக்கப்படுவதாக, இயற்கையின் அருளை மனிதர்கள் மீது கொள்வதற்காக, அம்மன் தெய்வங்களின் வடிவில் வழிபாடு செய்யப்படுகிறது. தமிழகத்தின் ஏறத்தாழ அனைத்து ஊர்களிலும் அம்மன் வழிபாடு, சிறு தெய்வ வழிபாடு செய்யப்படுகிறது. ஆடி தேரோட்டம், திருஆடிப்பூரம், ஆடி வெள்ளி, ஆடி செவ்வாய் திருவிழா தினங்கள் ஆகும்.

### ஆவணி திருவோணத் திருவிழா

முப்பெரும் கடவுள்களில் ஒருவரான திருமாலோடு தொடர்புடைய நட்சத்திரம் திருவோணம் ஆகும். இந்நாளில் கொண்டாடிய விழா ஓணம் ஆகும். இச்செய்தியை,

“கணங்கொள் அவுணர்க் கடந்த பொத்தான்

மாயோன் மேய ஓர் நன்னாள்” (மதுரைக்,590-591)

எனும் அடிகள் வெளிப்படுத்துகின்றன. இவ்விழா ஆணி திங்களில் கொண்டாடப்பட்டது. இவ்விழா பிற்காலத்தில் சேர நாடான கேரள மாநில மக்கள் கொண்டாடும் விழாவாக மாறிவிட்டது. கிபி ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆழ்வார்கள். இது பற்றி குறிப்பிடுகின்றனர் கிபி 12ஆம் நூற்றாண்டில் சைவம் புத்துயிர் பெற்ற போது ஆதிரைநாள் சிறப்பிடம் பெற்றது.

### புரட்டாசி மாயோன் வழிபாடு

திருவேங்கடம் என்றாலே நம் வினை நீங்கிவிடும். இவ்வளவு சிறப்பு வாய்ந்த அந்த திருமாலுக்கு புரட்டாசி பெருவிழா சிறப்பானது. புரட்டாசி கன்னி மாதம். சூரியன், கன்னி ராசியில் சஞ்சரிப்பதால் கன்னி மாதம். இந்த மாதத்தில் ‘பெய்தால் மண் உருகப் பெய்யும் காய்ந்தால் பொன் உருகக் காயும்' என்பார்கள்.

இந்த மாதத்தில் ‘கோவிந்தா, கோவிந்தா’ என நெற்றியில் திருமண் தரித்து, பஜனை செய்து, வீடு தோறும் பாத்திரத்தில் தானம் பெற்று அதை சமைத்து விரதம் முடிப்பவர் பலர்.

புதன் கிரகத்திற்கு அதிதேவதை திருமால். திருமால் என்ற பெருமாள் வழிபாடு தமிழர்களுக்கு புதிதல்ல. நிலத்தை ஐந்து வகையில் பிரித்த தமிழர், ‘முல்லை-காடும் காடு சார்ந்த இடமும்- அதன் கடவுள் திருமால்’ ஆயனாக-கோபாலனாக வந்த கண்ணன், ‘மாயோன் மேயக்காடுறை உலகம்' என்றனர். அந்த புதன் உச்சமாய் இருப்பது கன்னி ராசியில் தான். புரட்டாசி கன்னி மாதமாதலால் அதில் திருமாலுக்கு வழிபாடு பொருத்தம் தானே! இந்த மாதத்தில் பெரும்பான்மையானவர்கள் அசைவம் தவிர்த்து விரதம் இருப்பர். விஞ்ஞான ரீதியான காரணம், புரட்டாசி மாதத்தில் காற்றில் ஈரப்பதம் குறைவு. வெயில் அதிகம். அப்போது காரம் எண்ணெய் அதிகம் உள்ள புலால் உணவு உண்டால் செரிமானம் குறையும். வயிறு உபாதைகள் அதிகமாகும். எனவே முன்னோர் சைவ உணவுக்கு மாறி விரதம் மேற்கொண்டார்கள் போலும்.

சுக்கிரன் கண் பார்வைக்குரிய கோள். சுக்கிரன் அம்மாதத்தில் கன்னி ராசியில் நீச பலத்தோடு அமர்வதால் கண் நோய்கள் வரும். ‘மெட்ராஸ் ஐ’ செப்டம்பர், அக்டோபர் மாதத்தில் தாக்கும்.

தட்பவெப்ப மாற்றத்தில் இருந்து உடல் நலத்தை காக்க துளசி தீர்த்தம் பருகி உபாதைகளை தடுக்கின்றனர். இறந்த மூதாதையரான பித்ருக்களுக்கு புரட்டாசி அமாவாசை நாளான மகாளய பட்சம் அன்று தர்ப்பணம் அளிக்கின்றனர். நவராத்திரி கலை விழா, தொழில் வெற்றிக்கு ஆயுத பூஜை, ஆயகலைகள் 64 தரும் கலைமகளுக்கு சரஸ்வதி பூஜை, வெற்றிகள் தரும் விஜயதசமி கொண்டாடப்படுகின்றது.

## ஐப்பசி

ஐப்பசி மாதத்தை துலா மாதம் என்பார்கள். காவிரியில் நீராடும் துலாஸ்நானம் என்ற நிகழ்வு இம்மாதத்தில் மேற்கொள்ளப்படுகிறது. முருகப்பெருமானை நினைத்து மேற்கொள்ளும் முக்கிய விரோதமான கந்த சஷ்டி திருவிழாவும் இம்மாதத்தில் நிகழ்கின்றது. இம்மாத பௌர்ணமியில் எல்லா சிவாலயங்களில் உள்ள சிவபெருமான் திருமேனிக்கு அன்னாபிஷேகம் நடைபெறுகின்றது.

ஐப்பசி அம்மாவாசையில் தீபாவளி பண்டிகை இந்தியா முழுவதும் இந்துக்கள், சமணர்கள், சீக்கியர்கள் மிக விமர்சையாக கொண்டாடப்படுகிறது. வட இந்தியாவில் லட்சுமி பூஜை என்றும், வங்காளத்தில் காளி பூஜை என்றும் வழங்கப்படுகின்றது. இப்பண்டிகையின் போது நல்லெண்ணெய் தேய்த்து மக்கள் நீராடுவர். இதற்கு கங்காஸ்நானம் என்று பெயர். பின் புதிய ஆடைகள், பட்டாசுகள், இனிப்புகள் வைத்து வீட்டில் வழிபாடு நடத்துகின்றனர். புதிய ஆடைகளை அணிந்து கோயில்களில் வழிபாடு நடத்துகின்றனர். உற்றார், உறவினர், நண்பர்களுக்கு இனிப்புகள், பரிசு பொருட்கள் வழங்கி மகிழ்கின்றனர்.

## கார்த்திகை விழா

கார்த்திகை விண்மீனை 'அறுமீன்' என்று நற்றிணை செய்யுள் ஒன்று குறிக்கின்றது. அது அறஞ்செய்யத்தக்க சிறப்புடையது. எனவே கார்த்திகை திங்களை "அறஞ்செய் திங்கள்" என்று நற்றிணை(பா.எ,185) குறிப்பிடுகின்றது. கார்த்திகை விழாக்களின் போது வீடுகளும் தெருக்களும் ஒளி விளக்குகளால் அழகுறுத்தப் பெற்றமையை,

"மழைக்கால் நீங்கிய மாசறு விசும்பின்

குறுமுயல் மறுநிறம் கிளர் மதிநிறைந்து

அறுமீன் சேரும் அகலிருள் நடுநாள்

மறுகு விளக்குறுத்து மாலை தூக்கிப்

பாலியல் மூதூர்ப் பலருடன் துவன்றிய

விழவுடன் அயர்" (Venkatasamy Nattar, 2012)

என்ற அகநானூற்று பாடல் குறிப்பிடுகின்றது. இலவ மரத்தில் நெருக்கமாக மலர்ந்துள்ள பூக்கள் பெருவிழாவில் ஏற்றப்பட்ட விளக்கும் போல் தோன்றியதாக,

"அருவி யான்ற உயர்சிமை மருங்கில்

பெருவிழா விளக்கம் போலப் பலவுடன்

இலையில்மலர்ந்த இலவமொடு

நிலையுயர் பிறங்கல் மலையிறந்தோரே" (Venkatasamy Nattar, 2012)

என்று செய்யுள் பேசுகின்றது.

### மார்கழி

பாவை வழிபாடு என்ற ஒரு வழிபாடும் அக்காலத்தில் நிகழ்ந்துள்ளமையை,

“தைஇ நின்ற தண்பெயல் கடைநாள்” (Venkatasamy Nattar, 2012)

“வண்டற் பாவைஉணர்; துறைத் தரீஇத்

திருத்துதல் மக்களில் குரவை அமரும்” (Venkatasamy Nattar, 2012)

என்ற பாடலால் அறியலாம். திங்களிலே குளிர்ந்த பெயலின் கடைப்பட்ட நாட்களிலே பொன்னாலாகிய காசுகளைத் தொடுத்து அணிந்த வண்டல் விளையாட்டிற்கு உரிய பாவையை அழகிய நெறியினையுடைய மகளிர் நீர் உண்ணும் துறையிலே கொண்டு வந்து வைப்பர். அப்போது அவர்கள் குரவைக் கூத்து ஆடுவர். இந்நிகழ்வே பண்டைய பாவை வழிபாடு எனப்பட்டது. இவ்வழிபாடு பிற்காலத்தில் பாவை வழிபாடு, பாவை நோன்பு என்று மாறியது. திருப்பாவை, திருவம்பாவை பக்தி இலக்கியங்கள் இவை சார்ந்து தோன்றியவை ஆகும். மார்கழி மாதம் முழுவதும் அதிகாலையில் கடும் குளிரையும் பொருட்படுத்தாது நீராடி ஆலயங்களில் இறைவனை வைணவர்கள் திருப்பாவையையும், சைவர்கள் திருவெம்பாவையையும் துதித்து வழிபடுவர்.

### தைப்பொங்கல்

பழங்கால பெண்கள் தை மாதத்தில் நோன்பு இருந்த செய்தியினை சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. தை மாதத்தில் நோன்பிருந்து வைகை ஆற்றில் நீராடி சிறந்த கணவர் வாய்க்கப் பெற வேண்டும் என பெண்கள் வேண்டியதாக பரிபாடல் கூறுகின்றது.

‘வையை நினைக்கு படை வாய்த்தன்று

மையால் உடன் மழப்புலவர் மாறெழுந்து

பொய்யாடலாடும் புணர்ச்சி ரைடர்

தீயெரிப் பாலும் செறிந்த முன் பூற்றியோ

தாயருகா நின்று தவத் தைந்நீராடல்

நீயுரைத்தி வையை நதி’

உழவுத் தொழிலின் அனைத்து படிநிலைகளையும் சங்க பாடலில் காணலாம்.

“பைதுஅற விளைந்த பெருஞ் செந்நெல் லின்

தூம்புடைத் தினம்தான் துடித்த நிறைஞர்”

என அறுவடை செய்யும் உழவரைப் பற்றி பெரும்பாணாற்றுப்படை கூறுகின்றது.

குறுங்கோழியூர்க் கிழார் புலவர்,

“அலங்கு செந்நெல் கதிர் வேய்ந்த

பாய் கரும்பின் கொடிகள் கீரை

சாறு கொண்ட களம் போல.....” (Swaminatha Iyer, 2014)

எனக் குறிப்பிடுகின்றார். நெல்லோடு வேயப்பட்ட நெல்லந்தாள் கூரை வீடும், கருப்பஞ்சருகு வேய்ந்த கூரை வீடுகளும் தனித்தனியே விழாக் கொண்டாடப்பட்ட களம் போலப் பொலிவுடன் காட்சி தருகின்றன எனக் குறிப்பிடுகிறார். அறுவடைக் களங்களில் விழாக்கள் கொண்டாடப் பட்டிருக்கின்றன என்ற செய்தி இதன் வாயிலாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. சிலப்பதிகாரத்தில் வரும் இந்திர விழாவின் துவக்கத்தில் காவல் பூதத்திற்கு புழுக்கலும், நோடையும்,விழுக்குடை மடையும், பூவும் புகையும் பொங்கலும் சொரிந்து வழிபட்டதாக குறிப்பிடப்படுகிறது. இதில் புழுக்கல் என்பதுதான் பொங்கல்.

சம்பந்தர் தன் மயிலாப்பூர் பதிகத்தில் 'நெய்பூசும் ஒண்புழுக்கல் நேரிழையார் கொண்டாடும் தைப்பூசம்' எனச் சுட்டுகிறார். சீவக சிந்தாமணி என்னும் காப்பியத்திலும் பொங்கல் பற்றிய குறிப்பு இடம்பெறுகிறது.

'மதுக்குலாம் அலங்கல் மாலை

மங்கையர் வளர்த்த செந்நீர்

புதுக்கலத்து எழுந்த தீம்பால் பொங்கல்'

சோழர்கள் காலத்தில் 'புதியேடு' பண்டிகை என்ற பெயரில் புதிய அரிசியிட்டு பொங்கும் விழா நடைபெற்றதாகத் திருவொற்றியூர் செப்பேடுகள் தெரிவிக்கின்றன. பொங்கலன்று அதிகாலை எழுந்து குளித்து வீட்டு முற்றத்தில் கோலம் இட்டு அதன் நடுவில் பானை வைப்பர். புதுப்பானையில் புது அரிசியிட்டு முற்றத்தில் பொங்கல் வைப்பார்கள் புதிய மஞ்சள் கொத்தையும் புதிய கருப்பையும் புதிய காய்கறிகளையும் அன்று பயன் படுத்துவர். முற்றத்திற் கோலமிட்டு தலை வாழையிலையில் நிறைகுடம் வைத்து விளக்கேற்றி கதிரவனை வணங்கி பொங்கலிட தொடங்குவார். பொங்கல் பொங்கி வரும் வேளையில்,

"பொங்கலோ பொங்கல்!" என்று உரக்க கூவி மகிழ்வர். கதிரவனுக்குப் படைத்து, சுற்றத்தாருக்கு கொடுத்து மகிழ்வர்.

"தைஇத் திங்கள் தண்ணிய வரினும்" (Parimanam & Balasubramaniyam, 2004a)

"தைஇத் திங்கள் கண்கள் படியும்" (Parimanam & Balasubramaniyam, 2004b)

"தைஇத் திங்கள் கண்கள் போல்" (Swaminatha Iyer, 2014)

"தைஇத் திங்கள் கண்கள் போல்" (Avvai Duraisamy Pillai, 1957)

தைப்பொங்கல் நாளின் மறுநாள் மாட்டுப் பொங்கல். உழவுக்கு உதவிய கால்நடைகளுக்கு நன்றி செலுத்தும் விழாவாக கொண்டாடப்படுகிறது. மூன்றாம் நாள் காணும் பண்டிகை கொண்டாடப்படுகிறது.

### மாசி மகம்

மாசி மகம் என்பது மாசி மாத பௌர்ணமியுடன் கூடிவரும் மக நட்சத்திர நாளில் இந்துக்களால் கொண்டாடப்படும் ஒரு சிறப்பான நாளாகும். அன்றைய தினம் கடலாடும் விழா என்று கொண்டாடப்படுகிறது.பிறவிப் பெருங்கடலில் வீழ்ந்து துன்பக்கடலில் மாய்ந்தழுந்தும் ஆன்மாவானது இறைவனது அருட்கடலாகிய இன்பவெள்ளத்தில் அமிழ்ந்து திளைக்கச் செய்யும் நன்நாளே மாசிமகக் கடலாடு தீர்த்தமாகும். தீர்த்தமாட இயலாதவர்கள் விரதமிருந்து கோயிலுக்குச் சென்று இந்நாளைக் கொண்டாடுவர்.

தமிழ் நாட்டில் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை கும்பகோணத்தில் கும்பேசுவரர் கோயிலில் மாசிமகத் திருவிழா (மகாமகம்) சிறப்பாக நடைபெறும். அன்று யமுனை, சரசுவதி, கோதாவரி, நர்மதா, சிந்து, காவேரி போன்ற 12 நதிகள் மக்கள் கழுவிய பாவச்சுமைகளை அகற்றி புனிதம் பெற அங்கு வருவதாகவும், குரு சிம்ம ராசிக்கு வரும் இந்நாளில் எல்லோரும் கடலில் நீராடி நற்பேறு பெறுவர் என்பதும் ஐதீகம்.

### பங்குனி விழா

பங்குனி மாதம் முழுவதும் விழாக்களுக்கு பஞ்சம் இருக்காது. சோழ நாட்டின் உறையூரில் பங்குனி விழா சிறப்பாக நடந்தேறிய செய்தியை உறையூர் முதுகூத்தனார்,

"வென்றெறி முரசின் விறற்போர்ச் சோழர்

இன்கடும் கற்களின் உறையு ராங்கண்

வருபுனல் பெரிதும் ஆடுகளைப் பேரியாற்று

உருவ வெண்மணல் முருகுநாறு தன்பொழில்

பங்குனி முயக்கம் கழிந்த வழிதான்” (Venkatasamy Nattar, 2012)

என்று நயம்படச் சுட்டுகிறார்.

இவை மட்டுமல்லாமல் அந்தந்த வட்டாரங்களிலும் பெருவாரியான விழாக்கள் கொண்டாடப்பட்டு வந்தன. குறிப்பாக திருப்பரங்குன்ற விழா, தமிழ் கடவுளான முருகனின் திருமண விழா கொண்டாடப்படுகின்ற நிகழ்வினை பரிபாடல் எடுத்துரைக்கின்றது. இந்திர விழா கொண்டாடியதனை சோழநாட்டு புகழுடன் தொடர்புடையதாக இரட்டைக் காப்பியங்கள் குறிப்பிட்டாலும் இவ்விழா மதுரையிலும் கொண்டாடப்பட்டதாக சின்னமனூர் செப்பேடுகள் குறிப்பிடுகின்றன. புனலாட்டு விழா வான் மழை பொழிந்து நீண்ட ஆற்றில் நீரோட்டம் ஏற்பட, அதில் நீராடி வழிபடுவதே புனலாட்டு விழா. இவ்விழாவினை கொண்டாடியதனை பட்டினபாலையிலும் அகநானூற்றிலும் காணலாம். பிறந்தநாள் விழா கொண்டாடியதனை தொல்காப்பியத்தின் வழி அறியலாம்.

‘பிறந்த வாழ்வின் பெருமக்களும்’ (Ilankumaranar, 2018)

## முடிவுரை

தமிழ்மக்கள் கூடி வாழ்ந்து சுற்றமுடன் மகிழ்ச்சி பொங்க வாழ்ந்து இன்பத்தில் திளைத்தச் செய்தியை அவர்களின் விழாமரபு உணர்த்தி நிற்கிறது. விழாக்காலங்களில் விருந்தினர்க்கு விருந்து படைத்தும் மகிழ்ந்தனர். தொன்மைக் காலம் முதல் இன்று வரை இவ்வாறு பல்வேறு விழாக்களைக் கொண்டாடிய முறையைப் பார்க்கும் போது அறிவிலும் நாகரிகத்திலும் மேம்பட்ட வாழ்வை வாழ்ந்து பேறுபெற்றமையை நன்கு உணரலாம். இத்தகைய விழாக்களைத் தமிழர்கள் எக்காலத்தில் கொண்டாட ஆரம்பித்தனர் என்பதற்குச் சான்றுகள் காணப்படாதத் தொன்மை நிலை வியக்க வைக்கிறது. சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்பு உலகமே காட்டுமிராண்டிகளாக வாழ்ந்த காலத்தில் தமிழினம் மட்டும் பண்பாட்டில் மேம்பட்டு நாகரிகத்தில் சிறந்து விளங்கியமை தமிழராகிய நம்மை இறுமாப்புக்கொள்ள வைக்கிறது. எனவே நாமும் சிறந்த மரபுரிமையான விழாக்களைக் கொண்டாடி மகிழ்ந்து அடுத்த தலைமுறையினருக்கும் கொண்டு சேர்ப்போமாக…!

## References


Avvai Duraisamy Pillai, (1957) Ainkurunuru Source and Descriptive Text, Annamalai University, Chidambaram, India.

Ilankumaranar, U.A. (2018) Tolkappiyam – Thelivurai, Fourth Tamil Sangam, Madurai, India.

Parimanam, A.M., Balasubramaniyam, K.V. (2004a) Kurunthogai, New Century Book House Pvt Ltd, Chennai, India

Parimanam, A.M., Balasubramaniyam, K.V., (2004b) Natrinai, New Century Book House Pvt Ltd, Chennai, India

Swaminatha Iyer, U.V. (2014) Purananooru Moolamum Uraiyum, U.Ve.Sa, Noolaga nilayam, Chennai, India.

Venkatasamy Nattar, N.M (2012) Agananooru Moolamum Uraiyum, Saratha Pathippagam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License